# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன் (கூட்டிணைத்தல்)

**குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ உதித் லொக்கு பண்டார அவர்களால் 2013, சனவரி மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2012, திசெம்பர் மாதம் 03 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

[ *199 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 006893 - 350 (2013/01)

## குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன் (கூட்டிணைத்தல்)

## குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷனைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் பணிப்பாளர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் கூட்டிணைக்கப்பட விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷனைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''பவுன்டேஷன்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்)குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷனின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன்'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அது அப்

2-PL 006893 -350 (2013/01)

பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சமுதாயத்தின் சிவில், கலாசார, சமூக மற்றும் தார்மீக நலனில் முனைப்பானதொரு ஆர்வம் செலுத்தி நட்புறவை சேவைக்கானதொரு வாய்ப்பாக விருத்தி செய்தல் ;

(ஆ) வர்த்தகம் மற்றும் தொழில் ஆகியவற்றில் உயர்ந்த அறநெறி நியமங்கள், எல்லா பயனுள்ள தொழில் களினதும் தகைசான்ற தன்மையை அங்கீகரித்தல், இம்மன்றத்தின் ஒவ்வோர் உறுப்பினரதும் தொழிலை சமூகத்திற்குச் சேவையாற்றுவதற்கானதொரு வாய்ப்பாக கண்ணியப்படுத்தல் ;

(இ) இம்மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினரதும் தனிப் பட்ட, வர்த்தக மற்றும் சமூகவாழ்வில் சேவை என்னும் சிந்தனையை பிரயோகித்தல் ;

(ஈ) சேவை என்னும் சிந்தனையால் ஒன்றுபட்ட ஆட்களின் ஓர் உலக வர்த்தக மற்றும் தொழில்சார் தோழமை மூலம் சர்வதேச புரிந்துணர்வு, நல்லெண்ணம் மற்றும் சமாதானம் ஆகியவற்றை மேம்படுத்தல் ;

(உ) சமூகசேவைத் திசைப்படுத்தல் வாயிலாக சமய சுமுகநிலையை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும் ;

(ஊ) பொதுமக்கள் நலனுக்குகந்த அனைத்து விடயங் களிலும் கலந்துரையாடல்களை ஆரம்பித்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் எல்லா அல்லது ஏதாவதொரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான வேறு எல்லாச் செயற்பாடுகளையும் செய்தல் ;

(ஏ) எந்தவொரு நபரும் ஏதேனும் கைத்தொழில், வர்த்தகம் அல்லது இறக்குமதி அல்லது ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவற்றில் ஈடுபட அல்லது ஏதேனும் விவசாய, கைத்தொழில் அல்லது வர்த்தக முயற்சிகளைத் தாபிக்க உதவுதல் அல்லது தொழில்நுட்பத்திறன் களில் ஆட்களை வெற்றிகரமாகப் பயிற்றுவிப்பதற் கான நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல் மற்றும் பிரசாரப் பணிகளை ஏற்பாடுசெய்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதும் பேணுவதுமாகும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக வேண்டி உள்ளூர் மற்றும் சர்வதேச கிளைகளை ஸ்தாபித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய ஐந்து பேருக்குக் குறையாத ஒன்பது பேருக்கு மேற்படாத எண்ணிக்கைகொண்ட உறுப்பினர்களைக்கொண்ட பணிப்பாளர் சபை ஒன்றினால் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும். கலாநிதி மர்வின் தனவர்தன குருகே அவர்கள் கூட்டுத்தாபனத்தின் ஆயுட்கால ஸ்தாபக நிறைவேற்றுத் தவிசாளராகவும், திரு. ஷாமிந்த தனவர்தன குருகே மற்றும் திரு. இந்திக்க தனவர்தன குருகே ஆகியோர் ஆயுட்கால உதவித் தவிசாளர்களுமாவர்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்தவர்களும் இச்சட்டத்தின் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களுமான உறுப்பினர்களை உள்ளடக்கிய மன்றத்தின் பணிப்பாளர் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையாதல் வேண்டும். மேற்படி, பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுத் தவிசாளர் மற்றும் உப தவிசாளர்கள் இருவர் தவிர்ந்த ஏனையோரது பதவிக்காலம் மூன்று (03) வருடங்களாக அமைதல் வேண்டும்.

**5**. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் ஆலோசனைக் குழுக்களை நிறுவுதல், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது சேகரித்தல், கூட்டுத்தாபன நிதியத்திற்கான நிதியைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு பலவிதமான பொருட்காட்சிகள், சீட்டிழுப்பு போன்றவற்றை நடாத்துதல், கூட்டுத்தாபனத்தின் நிதியை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களை உடையதாதல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் எய்துவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**6**. (1) காலத்திற்குக்காலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டம் ஒன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்தல், விலக்கல், பதவிதாங்குநர்களின் அதிகாரம், நடத்தை மற்றும் கடமைகள் தொடர்பிலும், பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை பற்றியும், கூட்டுத்தாபனத்தில் அலுவலர்கள், சேவையாளர்களது நடத்தை, கடமைகள், பணிகள் அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவத்திற்காகவும் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம், அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

**7**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

**8**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் ஒருவரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும்பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**11**. இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**அட்டவணை** (பிரிவு 4(2)

**பிரதம ஆன்மீக ஆலோசகர்கள்**

*சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித்த தேரர்

*அதி வண. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை, கொழும்பு அதி மேற்றிராணியர் (சுயவிருப்பை தெரிவித்ததற்கேற்ப)

*இந்து சமய குருக்களுக்காக

*இஸ்லாமிய குருமார்களுக்காக

*சர்வதேச துறவி ஆலோசகர் வல்பொல கல்யாணதிஸ்ஸ நாயக்க தேரர் - ஆலோசகர் - சுவிற்சர்லாந்து.

| | | |
|---|---|---|
| 1. | கலாநிதி திரு. மர்வின் தனவர்தன குருகே | - நிறைவேற்றுத் தவிசாளர் |
| 2. | திரு. ஷாமிந்த தனவர்தன குருகே | - உப தவிசாளர் (பணிப்பாளர்) |
| 3. | திரு. இந்திக்க தனவர்தன குருகே | - உப தவிசாளர் (பணிப்பாளர்) |
| 4. | திருமதி அனிகன் கத்தரினா ஹென்றிக்ஷன் (சர்வதேச அமைப்பாளர் - நோர்வே) | - பணிப்பாளர் |
| 5. | திரு. நிமல் எட்வட் திசாநாயக்க, உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வுபெற்ற) | - பணிப்பாளர் |
| 6. | திரு. ஏ. எல். எம். பர்னாந்து (ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி) | - பணிப்பாளர் |
| 7. | திரு. ரொய்சிறி அபேகுணவர்தன (ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர்) | - பணிப்பாளர் |
| 8. | ராஜபக்ஷ கெதர நாமல் ஜயதிஸ்ஸ ராஜபக்ஷ (பொது முகாமையாளர்) | - பணிப்பாளர் |
| 9. | திரு. குவின்டஸ் ரொட்றிகோ, சமாதான நீதவான் (கம்பெனிப் பணிப்பாளர்) | - பணிப்பாளர் |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*